ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,873/7 — 1969 ඔක්තෝබර් 1 වැනි බදාදා — 1969.10.1
14,873/7 ம் இலக்கம்—1969 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 1 திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவால் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஆர். ප්‍රේමදාස,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1969 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 30 ந் உ.

கட்டளை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தில் முரணானதெதுவேனுமிருப்பினும், இதற்குள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபை ஒவ்வொன்றும் அமையப்பெற்றுள்ள மாவட்டத்துக்கான தேர்தல் அலுவலர், அவற்றின் உறுப்பினர்களின் பதவிக்காலம் முடிவுறவிருக்கும் தேதியைக் கருத்திற்கொண்டு, அவரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய தேதிகளில் அவ்வுள்ளூரதிகார சபை ஒவ்வொன்றினதும் பொருட்டான தேர்தல் நிரல்களைத் தயாரிப்பதற்கும் பொதுத் தேர்தல் ஒன்றினை நடாத்துதற்கும் (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம், 26 ஆம் பிரிவுகளால் வேண்டப்படுகின்ற நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

அட்டவணை

கொழும்பு மாவட்டம்

அவிசாவெலை நகர சபை

காலி மாவட்டம்

பெந்தோட்டை பட்டினச் சபை

பதுளை மாவட்டம்

வெளிமடை பட்டினச் சபை

10-367